ONE TWO ACADEMY

10 - ஆம் வகுப்பு

தமிழ்

இயல் - 2

மதிப்பெண்கள்:-50 **கால அளவு: 1.30 மணி நேரம்**

I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10 x 1 = 10**

1. "வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில் ஆயுள் பெருக்கம் உண்டாம்" என்ற பாடலடியைப் பாடியவர்

அ) திருமூலர் ஆ) ஔவையார்

இ) தொல்காப்பியர் ஈ) கம்பர்

2. ''நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா' என்று பாராட்டப்பட்டவர்.

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) சுரதா ஈ) கவிமணி

3. 'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

4. முல்லைத் திணைக்குரிய பூ வகை

அ) காந்தள் ஆ) பிடவம்

இ) தாழை ஈ) பாதிரி

5. புயலிலே ஒரு தோணி என்னும் புதினத்தின் என்னும் அத்தியாயத்தின் சுருக்கப்பட்ட பகுதி பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

அ) காவியக்கூத்து ஆ) கலைக்கூத்து

இ) கடற்கூத்து ஈ) இசைக்கூத்து

6. 'பெரிய மீசை' சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

7. கீழ்க்காணும் சொற்களில் உம்மைத்தொகை அல்லாத சொல் எது?

அ) தேர்ப்பாகன் ஆ) அண்ணன் தம்பி

இ) வெற்றிலை பாக்கு ஈ) இரவு பகல்

8. சிறப்புப் பெயர், பொதுப்பெயர் ஆகியன வரும் தொகைச்சொல்

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

9. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.

i) கொண்டல் - **1.** மேற்கு **ii)** கோடை - **2.** தெற்கு

iii) வாடை - **3.** கிழக்கு **iv)** தென்றல் - **4.** வடக்கு

அ) **1, 2, 3, 4** ஆ) **3, 1, 4, 2**

இ) **4, 3, 2, 1** ஈ) **3, 4, 1, 2**

10."உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்"– பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை

இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

II எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் **8 X 2 = 16**

11.வசன கவிதை - குறிப்பு வரைக.

12.மாஅல் - பொருளும் இலக்கணக் குறிப்பு தருக.

13.தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக; தொடரில் அமைக்க.

14.காற்றைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை?

15.சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.

அ) இன்சொல் – ஆ) எழுகதிர் –

16.அகராதியில் காண்க.

அ) அகன்சுடர் – ஆ) கட்புள் –

17.கலைச்சொல் அறிவோம்:

அ) Tornado – ஆ) Storm –

18.மொழியை ஆள்வோம்

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers.

19.வண்ணமிட்ட தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்துக.

அன்புச்செல்வன் திறன் பேசியின் **தொடுதிரை**யில் படித்துக்கொண்டிருந்தார்.

20.காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 2 X 4 = 8

21.சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.

22.தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த்தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

23.முல்லைப்பாட்டு பாடலில் இடம் பெற்றுள்ள முதல், கரு, உரிப்பொருள்களை எழுதுக.

IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8

24.முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்தியை விவரித்து எழுதுக.

25.புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொ ற்களும் புயலில், தோணிபடும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். **1 X 8 = 8**

26.மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

27.நயம் பாராட்டுக.

மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே - வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொ டியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே - வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே -கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க.

All the Best | One Two Katral maiyam